செ.வெ.எண்: 40 நாள்: 21.03.2021

# தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் 7 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளை தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் மற்றும் காவல் பார்வையாளர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி டேனி கல்வியியல் கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 முன்னிட்டு செஞ்சி சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளை செஞ்சி மற்றும் மயிலம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.வினோத்குமார்.இ.ஆ.ப., அவர்கள் மற்றும் காவல் பார்வையாளர் திரு.பி.ஆர்.பாந்தல்.இ.கா.ப., அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் திண்டிவனம் மற்றும் மயிலம் சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளை திண்டிவனம் மற்றும் வானூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.முகம்மது கைசர் அப்துல்ஹக்.இ.ஆ.ப., அவர்கள் மற்றும் காவல் பார்வையாளர் திரு.பி.ஆர்.பாந்தல்.இ.கா.ப., அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் வானூர் ஸ்ரீ அரவிந்தர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வானூர் சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளை திண்டிவனம் மற்றும் வானூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.முகம்மது கைசர் அப்துல்ஹக்.இ.ஆ.ப., அவர்கள் மற்றும் காவல் பார்வையாளர் திரு.பி.ஆர்.பாந்தல்.இ.கா.ப., அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து விழுப்புரம் ஏழுமலை பாலிடெக்னிக் கல்லூரியில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளை விழுப்புரம் மற்றும் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் செல்வி.ரஞ்சிதா.இ.ஆ.ப., அவர்கள் மற்றும் காவல் பார்வையாளர் திரு.பி.ஆர்.பாந்தல்.இ.கா.ப., அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் வள்ளியம்மை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளை திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.எம்.ஐ.பட்டேல்.இ.ஆ.ப., அவர்கள் மற்றும் காவல் பார்வையாளர் திரு.பி.ஆர்.பாந்தல்.இ.கா.ப., அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளை விழுப்புரம் மற்றும் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் செல்வி.ரஞ்சிதா.இ.ஆ.ப., அவர்கள் மற்றும் காவல் பார்வையாளர் திரு.பி.ஆர்.பாந்தல்.இ.கா.ப., அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது வாக்கு எண்ணும் மையத்தில் மின்னணு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைப்பதற்கான Strong Room, வாக்கு எண்ணும் மையங்களில் தடுப்பு கட்டை வசதிகள், வாக்குகள் எண்ணும் இடம் மற்றும் அனைத்து அறைகளிலும் **CCTV Camera** பொருத்தப்பட்டு கண்காணிப்பு வசதிகள், தடையில்லா மின்சார வசதி, ஜெனரேட்டர் வசதி, தேர்தல் பார்வையாளர்கள் அறை, தேர்தல் நடத்தும் அலுவலரின் அறை, காவல் கட்டுப்பாட்டு அறை, கணினி அறை, இணையதள மற்றும் கணினி வசதியுடன் கூடிய செய்தியாளர் ஊடக மைய அறை, மருத்துவக்குழுவினருடன் மருத்துவ அறை மற்றும் சுகாதாரமான குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் முழுமையாக ஏற்படுத்திட வேண்டும், மேலும் அரசியல் கட்சி முகவர்கள் அமருவதற்கான இருக்கை வசதி, வாகனங்கள் நிறுத்தும் வசதி உள்ளிட்டவற்றை ஏற்படுத்திட வேண்டும் என பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் அறிவுறுத்தினர்.

இந்த ஆய்வின்போது மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., திண்டிவனம் தேர்தல் நடத்தும் அலுவலர்/சார் ஆட்சியர் டாக்டர்.எஸ்.அனு.இ.ஆ.ப. திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியர் செல்வி.சாய்வர்தினி மாவட்ட தீயணைப்புத்துறை அலுவலர் திரு.ராபின் காஸ்ட்ரோ, செஞ்சி காவல் துணை கண்காணிப்பாளர் திரு.இளங்கோவன், வானூர் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.அஜய் தங்கம், செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை (க&ப) திரு.எம்.பரிதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.